**விஸ்வதீப்தி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி**

**நான்காம் வகுப்பு　　　　தமிழ்　　　　இரண்டாம் பருவம்**

**கற்றல் பயிற்சித் தாள்**

**பாடம் - 1 காவல்காரர்**

**I. பொருள் தருக:**

1. உடுத்தி - அணிந்து
2. உலவ - சுற்றிவர
3. நித்தம் - நாள்தோறும்
4. வேலை - பொழுது
5. சீக்கிரத்தில் – விரைவில்
6. இக்கணத்தே – இப்பொழுதே

**II. பிரித்து எழுதுதல்:**

1. நின்றிருந்தார் - நின்று + இருந்தார்
2. பெயரில்லாத - பெயர் + இல்லாத
3. வந்ததையோ - வந்தது + ஐயோ
4. வாழையிலை - வாழை + இலை

**III. சேர்த்து எழுதுக:**

1. பயம் + இல்லாமல் = பயமில்லாமல்
2. நினைத்து + இருந்தேன் = நினைத்திருந்தேன்
3. உடுத்தி + கொள்வீர் = உடுத்திக்கொள்வீர்
4. விட்டது + அங்கே = விட்டதங்கே

**IV. எதிர்ச்சொல் தருக:**

1. இங்கும் × அங்கும்
2. பழைய × புதிய
3. கீழே × மேலே
4. இரவும் × பகலும்
5. பலவகை × சில வகை

**V. வினாவிற்கு விடை அளிக்க:**

1. தோட்டத்தின் நடுவே ராஜா போல் நின்றது எது?

**தோட்டத்தின் நடுவே ராஜா போல நின்றது பொம்மை.**

2. காவல்காரருக்கு தோட்டத்தில் உள்ள பணி யாது?

**இரவும் பகலும் தூங்கிடாமல் தோட்டத்தைக் காவல் காப்பது.**

3. பொம்மைக்கு கருப்பு கோட்டு வெள்ளை சட்டை கொடுத்தது எது?

**பொம்மைக்கு கருப்பு கோட்டு வெள்ளை சட்டை கொடுத்தது காகம்.**

4. காகம் குருவி ஏன் பயந்து ஓடின?

**காவல்காரரைக் கண்டு காக்கையும் குருவியும் பயந்து ஓடின.**

**VI. உரைநடை பகுதியை படித்து வினாக்களுக்கு விடை எழுதுக:**

நமக்குப் பயன் தரும் பல மரங்களில் வாழையும் ஒன்று. வாழையின் பூ காய் கனி தண்டு ஆகியவற்றை நாம் சமைத்து உண்கிறோம் வாழைநாரைக்கொண்டு பூக்களை தொடுக்கிறோம்விழாக்களிலும் வாழை இலையில் விருந்து படைக்கின்றனர் வாழையில் செவ்வாழை பூவன்வாழை மலை வாழை எனப்பல வகைகள் உள்ளன.

1. வாழையின் எப்பகுதிகள் உணவாக பயன்படுகின்றன?

**வாழையின் பூ, காய் ,கனி ,தண்டு ஆகியவை உணவாக பயன்படுகின்றன.**

2. வாழைநார் எதற்கு பயன்படுகிறது?

**வாழைநார் பூத்தொடுக்க பயன்படுகிறது.**

3. வாழையின் வகைகளை கூறுக?

**செவ்வாழை, பூவன் வாழை, மலை வாழை என்பன ஆகும்.**

**பாடம் – 2**

**யானையும் பானையும்**

**I. பொருள் தருக:**

1. விசித்திரமான - வேடிக்கையான
2. இரவல் - வாடகை இல்லா கைமாற்று
3. தற்செயலாக - எதிர்பாரா நிகழ்வு
4. ஆத்திரத்துடன் - கோபத்துடன்
5. அடம்பிடித்தார் - பிடிவாதம்பிடித்தார்

**II. பிரித்து எழுதுக:**

1.வழக்கொன்றை = வழக்கு + ஒன்றை

2. கூறியதிலிருந்து = கூறியதில்+இருந்து

3. காலங்காலமாக = காலம் + காலமாக

4. உம்முடைய = உம் +உடைய

**III. சேர்த்து எழுதுக:**

1.வேண்டும்+ என = வேண்டுமென

2. கூக்குரல் +இட்டார் = கூக்குரலிட்டார்

3. தீர்ப்பு +அளித்தார் = தீர்ப்பளித்தார்

4. பழமை+ பானைகள் = பழம்பானைகள்

**IV. எதிர்ச்சொல் தருக:**

1. கொடுத்தேன் × வாங்கினேன்

2. மறுக்கிறார் × சம்மதிக்கிறார்

3. வேண்டுமென × வேண்டாமென

4. பழம்பானைகள் × புதுப்பானைகள்

**V. வினாக்களுக்கு விடை தருக:**

1. உழவர் யானையை எதற்காக இரவல் கேட்டார்?

**மகன் திருமண விழாவில் ஊர்வலம் விடுவதற்காக உழவர் யானையை இரவல் கேட்டார்**

2. ஊர்வலம் சென்ற யானைக்கு என்ன நேர்ந்தது?

**ஊர்வலம் சென்ற யானை தற்செயலாக இறந்து விட்டது.**

3. மரியாதை ராமன் உழவரிடம் என்ன கூறி இருப்பார்?

**நாளை நீங்கள் நீதிமன்றத்திற்கு வர வேண்டாம் உங்கள் வீட்டு கதவின் பின்புறம் பழைய பானைகளை அடுக்கி வைத்து கதவை தாழ் போடாமல் வைத்திருங்கள் என்று மரியாதை ராமன் உழவரிடம் கூறியிருப்பார்**

**VI. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. வணிகர் **<u>அரபு</u>** நாட்டைச் சேர்ந்தவர்.
2. உழவர் வணிகர் இருவரின் வழக்கை எதிர்கொண்டவர் **<u>மரியாதை ராமன்.</u>**
3. திருமண ஊர்வலத்தில் **<u>யானை</u>** இறந்து விட்டது.
4. பழைய பானைகள் **<u>கீழே</u>** விழுந்து நொறுங்கின.

## பாடம் – 3 - பனிமலைப் பயணம்

**I. பொருள் தருக:**

1.விஷம் - நஞ்சு

2. விஷ முறிவு - நஞ்சு நீக்கி

3. பிரச்சனை - சிக்கல்

**II. பிரித்து எழுதுக:**

1. அருகிலிருந்த = அருகில்+ இருந்த 2. திடீரென்று =திடீர் +என்று

3. என்னவாயிற்று = என்ன +ஆயிற்று 4. விருந்துண்டு =விருந்து+ உண்டு

5. வந்திருக்கிறோம் = வந்து +இருக்கிறோம்.

**III. சேர்த்து எழுதுக:**

1. வரி + குதிரை =வரிக்குதிரை

2. இன்னும் + ஒரு = இன்னுமொரு

3. அ + காட்டில் = அக்காட்டில்

4.என்ன + என்று = என்னவென்று

5. பனிமலை + காடு = பனிமலைக்காடு

**IV. எதிர்ச்சொல் தருக:**

1.ஏறி × இறங்கி

2. அதிகரித்தது × குறைந்தது

3.விரைவாக × மெதுவாக.

**V. வினாவிற்கு விடை தருக:**

1. படகில் செல்லும் போது விலங்குகள் ஏன் திடீரென அலறின?

**ஆற்றில் நீரின் வேகம் அதிகரித்தது. படகு ஒரு பக்கமாய் சாய்ந்தது. அதனால் விலங்குகள் திடீரென்று அலறின.**

2. நரி முதலையிடம் என்ன கூறியது?

**வழியில் பாம்பு கடித்ததால் எங்களுக்கு நஞ்சு ஏறாமல் இருக்க நாங்கள் மூலிகை செடிகளை தின்று வந்திருக்கிறோம் அதனால் எங்களை யார் கடித்தாலும் அல்லது நாங்கள் யாரைக் கடித்தாலும் அவர்கள் இறப்பது உறுதி என்று கூறியது.**

.

3. விலங்குகள் படைகள் எங்கே சென்றன? ஏன்?

**பனிமலை காட்டில் நடைபெறும் திருவிழாவில் கலந்து கொள்வதற்காக விலங்குகள் படகில் சென்றன.**

4. இக்கதையில் உனக்கு பிடித்த விலங்கு எது? ஏன்?

**இக்கதையில் எனக்குப் பிடித்த விலங்கு நரி ஏனென்றால் தன்னுடைய தந்திரத்தால் மற்ற விலங்குகளையும் காப்பாற்றியது.**

## பாடம் - 4 - உள்ளங்கையில் ஓர் உலகம்

**I. பொருள் தருக:**

1. தரணி - உலகம்   2. ஏற்றம் - உயர்வு

3. தகவல்களஞ்சியம் - தகவல்களை சேகரிக்கும் இடம்

**II. பிரித்து எழுதுக:**

1. உலகைச்சுற்றி = உலகை + சுற்றி

2. எனக்கில்லை = எனக்கு + இல்லை

3. செய்திடுவேன் = செய்து + இடுவேன்

4. உள்ள்ங்கையில் = உள் + அம் + கையில்

**III. சேர்த்து எழுதுக:**

1. உலகை + சுருக்கி = உலகைச் சுருக்கி

2. என்று + இல்லை = என்றில்லை

3. துணை + புரிவேன் = துணைபுரிவேன்.

4. வேண்டும் + என்றால் = வேண்டுமென்றால்.

**IV. எதிர்ச்சொல் தருக:**

1. சுருக்கி × விரித்து

2. ஏற்றம் × இறக்கம்

3. முன்னே × பின்னே

4. போற்றி × தூற்றி

**V. வினா விடை:**

1. கணினியின் பயன்கள் யாவை?

**கணினி இணைய வழியில் அனைவரையும் இணைக்கிறது தகவல் தொடர்பினை ஏற்படுத்துகிறது எந்த பொருளைப் பற்றிய செய்தியையும் நொடிப் பொழுது தந்து உதவுகிறது**

2. தகவல் களஞ்சியம் நான் தானே என்று இப்பாடல் எதை கூறுகிறது?

**தகவல் களஞ்சியம் நான் தானே என்று இப்பாடல் கணினியைக் கூறுகிறது.**

3. கணினியை எல்லாரும் எவ்வாறு அழைக்கின்றனர்?

**உள்ளங்கையில் ஓர் உலகம் உள்ளதை காட்டும் கண்ணாடி என்று எல்லாரும் கணினியை அழைக்கின்றனர்.**

4. உலகைச் சுருக்கி உன் கையில் உலக விடுவது எது?

**உலகைச் சுருக்கி உன் கையில் உலவ விடுவது கணினி.**

## பாடம் - 5 - எழில் கொஞ்சும் அருவி

**I. பொருள் தருக:**

1. எழில் - அழகு
2. பேரரைச்சல் -பெரும்சத்தம்
3. பரிசல் -கூடை போன்ற அமைப்புடைய சிறிய படகு
4. கல்வெட்டு- கல்லில் பொறிக்கப்பட்ட எழுத்து
5. அனுபவம்- பட்டறிவு

**II. பிரித்து எழுதுக:**

1. பேரிரைச்சல் - பெருமை + இரைச்சல்
2. உச்சியிலிருந்து - உச்சியில் +இருந்து
3. கற்பாறை - கல் + பாறை
4. அங்குள்ள - அங்கு + உள்ள

**III. சேர்த்து எழுதுக:**

1. வெண்மை+ புகை = வெண்புகை
2. வெண்மை + நெய் = வெண்ணெய்
3. தேசம் + நாதீஸ்வரர் = தேசநாதஸ்வரர்
4. திரட்டி + இருக்கிறீர்கள் = திரட்டியிருக்கிறீர்கள்

**IV. எதிர்ச்சொல் தருக:**

1. உயரம் × குள்ளம்
2. தண்ணீர் × வெந்நீர்
3. பழமையான × புதுமையான
4. வெண்புகை × கரும்புகை

V. **வினா விடை:**

1. ஒகேனக்கல் அருவி எந்த மாவட்டத்தில்அமைந்துள்ளது?

**ஒகேனக்கல் அருவி தர்மபுரி மாவட்டத்தில் அமைந்துள்ளது.**

2. ஒகேனக்கல் அருவியில் நீர் விழும் காட்சி எப்படி இருந்தது?

**ஒகேனக்கல் அருவியில் நீர் விழும் காட்சி மலையின் உச்சியில் இருந்து வெள்ளியை உருக்கி ஊற்றியது போல இருந்தது.**

3. ஒகேனக்கல் பகுதியில் சுற்றி பார்க்க வேண்டிய இடங்களின் பெயர்களை எழுதுக?

**ஒகேனக்கல் பகுதியில் சுற்றி பார்க்க வேண்டிய இடங்கள் தொங்கு பாலம் மான் பூங்கா முதலைப்பண்ணை தேச நாதீஸ்வரர் கோவில் போன்றனவாகும்.**

4. அருவி நீர் ஓடும் காட்சி எவ்வாறு இருந்தது?

**மழை நடுவே அருவி நீர் ஓடும் காட்சிவெண்ணெய் உருகி ஓடுவது போல இருந்தது**

## பாடம் - 6 - அன்பின் வழி

I. **பொருள் தருக:**

1.சுமந்துகொண்டு-ஏற்றிக்கொண்டு

2. தடுமாறி - தள்ளாடி

3. இரக்கம் - கருணை

4. அமர - உட்கார

II. **பிரித்து எழுதுக:**

1. கேட்டறிய = கேட்டு + அறிய

2. கனைப்பொலி = கனைப்பு + ஒலி

3. மகிழ்ச்சியடைந்தது = மகிழ்ச்சி + அடைந்தது

4. அப்படியானால் = அப்படி + ஆனால்

III. **சேர்த்து எழுதுக:**

1. வேண்டும் + என்று = வேண்டுமென்று

2. ஏற்றி + கொண்டு = ஏற்றிக்கொண்டு

3. மன்னர் + உடன் = மன்னருடன்

4. அமர்ந்து +இருக்கும் = அமர்ந்திருக்கும்

**IV. எதிர்ச்சொல் தருக:**

1. நினைத்தது × மறந்தது
2. முன்னே × பின்னே
3. குறைகள் × நிறைகள்
4. ஏறி ×இறங்கி

**V. வினா விடை:**

**1.** குதிரை நாய்க்கு உதவி செய்ய நினைத்தது ஏன்?

**நாய்க்கு காலில் அடிபட்டு நடக்க முடியாமல் தடுமாறிச் சென்று கொண்டிருப்பதைப் பார்த்த குதிரை நாய்க்கு உதவி செய்ய நினைத்தது.**

**2.** மக்கள் ஏன் மன்னரை வாழ்த்தினர்?

**மன்னரின் குதிரை மீது அடிபட்ட நாய் அமர்ந்து வருவதைப் பார்த்த மக்கள் சிறு உயிரான நாயிடமே எவ்வளவு அன்பு காட்டும் மன்னர் நம் நலனையும் பாதுகாப்பார் என எண்ணி மன்னரை வாழ்த்தி மகிழ்ந்தனர்.**

**3.** மன்னர் குதிரையிடம் என்ன கூறி மகிழ்ந்தார்?

**குதிரையே! நீ இரக்க குணம் கொண்டு உதவுவதில் உனக்கு இருக்கின்ற மகிழ்ச்சியை போன்ற எனக்கும் இருக்கிறது என்று கூறி மகிழ்ந்தார்.**

**4.** நாய் ஏன் மகிழ்ச்சி அடைந்தது?

**காலில் அடிபட்ட நாய் மன்னருடன் குதிரை சவாரி செய்ததனால் மிகவும் மகிழ்ச்சி அடைந்தது.**

## பாடம் - 7 - நன்னெறி

**I. பொருள் தருக:**

1. இன் சொல் - இனிமையான சொல்
2. இரு நீர் - கடல்
3. வியனுலகம் - பரந்த உலகம்
4. வன்சொல் - கடுமையான சொல்
5. அதிர்வளை - ஒலிக்கின்ற வளையல்.

**II. பிரித்து எழுதுக:**

1.இன்சொல் = இனிமை + சொல் 2.வியனுலகம் = வியன் + உலகம்

**III. சேர்த்து எழுதுக:**

1. வன்மை + சொல் = வன்சொல் 2. தண்மை + என் = தண்ணென்.

**IV. எதிர்ச்சொல் தருக:**

1. இன் சொல் × வன்சொல்
2. மகிழாதே × மகிழும்
3. பொங்கும் × பொங்காது
4. அழல்கதிர் × தன்னன் கதிர்

**V. வினா விடை:**

1. நன்னெறி பாடலின் மையக்கருத்து யாது?

**நாம் எப்போதும் இன் சொற்களையே பேசுதல் வேண்டும்.**

2. கடலின் அலைகள் எப்போது பொங்கி எழும்?

**குளிர்ச்சி பொருந்திய நிலவின் ஒளி கண்டு கடல் பொங்கி எழும்.**

3. உலகம் எப்போது மகிழும் நன்னெறி பாடல் மூலம் உணர்த்துக?

**இனிமையான சொற்களைக் கேட்டு உலகம் மகிழும்.**

4. நன்னெறி நூலின் ஆசிரியர் யார்?

**நன்னெறி நூலின் ஆசிரியர் துரைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள்.**

5. நன்னெறி நூலில் எத்தனை வெண்பாக்கள் உள்ளன?

**நன்னெறி நூலில் 40 வெண்பாக்கள் உள்ளன.**

6. நன்னெறி நூலின் சிறப்பு யாது?

**ஒவ்வொரு வெண்பாவும் ஒவ்வொரு உவமை மூலம் ஒவ்வொரு நீதிக்கருத்தை விளக்குவது நன்னெறி நூலின் சிறப்பாகும்.**

**VI. பொருத்துக**

| | | | |
|---|---|---|---|
| 1. இன்சொல் | - | கதிரவனின் ஒளி | (3) |
| 2. வன்சொல் | - | நிலவின் ஒளி | (4) |
| 3. அழலகதிர் | - | கடுஞ்சொல் | (2) |

4. தன்னன்கதிர் - இனிய சொல் (1)